வழங்கியமைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணிகளுக்கு மத்திய அரசு வழங்கி வந்த மானியத்தை நிறுத்தியபோதும், குன்றிலிட்ட குணக் கொழுந்தாய், குறைவில்லாத கலைபொருளாய், கூறும் மறைபொருளாய், இதயக் கோயிலாய், இருள் அகற்றும் ஒளிவிளக்காய், இன்பமளிக்கும் திருவிளக்காய், எங்கும் ஒளிதரும் புகழ் விளக்காய் வாழும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழி நடத்துகின்ற எங்களுடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாகுபாடின்றி,

எல்லா மக்களும் என் உறவு
எல்லோர் மொழியும் என் பேச்சு
திசைதொழும் துலுக்கர் என் தோழர்
தேவன் இயேசுவும் என் கடவுள்
சத்தியம் எங்கள் வேதம்
சமத்துவம் எங்கள் கீதம்

என்பதை நாளும் மனதில் வைத்து, 4 முத்தான அறிவிப்புகளை பேரவை விதி எண் 110-ன்கீழ் அறிவித்தமைக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

(அ) மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் இணையவழி நூலகத்தில் தமிழ் மொழி உள்ளிட்ட தென்னக மொழிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11-30

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய பா.ஜ.க. அரசினுடைய மனித வள மேம்பாட்டுத்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜூலை 3

துறையின் சார்பில் புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கக்கூடிய இணையவழி நூலகத்தில் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் மட்டுமே இடம்பெற்றிருக்கின்றன. நம்முடைய தமிழ் மொழி முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் உள்ளபடியே மிகப் பெரிய அதிர்ச்சியை நமக்கு அளித்திருக்கிறது. தமிழ் மொழி மட்டுமல்ல, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னக மொழிகள் அனைத்துமே முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு, தெற்கு, வடக்கு என்ற பிளவு மனப்பான்மைக்கு நீர்வார்க்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே திட்டமிட்டு பரப்பக்கூடிய இத்தகைய வெறுப்பும், விரோதமும் மிக, மிகக் கண்டனத்திற்குரியதாக அமைந்திருக்கிறது. நம்முடைய இந்திய நாடு குறித்தும், இந்த நாட்டினுடைய கலாச்சாரம் குறித்தும் அனைத்து நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழக மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அறிந்துகொள்வதற்கு இந்த இணையவழி நூலகம் உதவும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 3 இலட்சம் எழுத்தாளர்களுடைய 1 கோடி நூல்கள் இதில் இடம்பெற்றிருந்தபோதிலும், தமிழகத்தைச் சார்ந்த வரலாற்று நூல்கள், புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நூல்கள் இதில் இடம்பெறவில்லை என்பதை வேதனையோடு நான் இங்கே பதிவு செய்கிறேன். ஆனால், வேத நூல்களில், மூல நூல்கள் அதன் பொருள் விளக்கங்களோடு அதில் இடம்பெற்றிருக்கின்றன. அந்த இணையவழி நூலகத்திலே நீங்களும் உங்கள் நூல்களைப் பதிவிடலாம் என்ற இடத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு உள்ளிட்ட தென் மாநிலங்களுடைய மொழி நூல்களைப் பதிவு செய்ய வாய்ப்பே கிடையாது. தமிழ் உள்ளிட்ட பிற மொழி நூல்களைப் பதிவு செய்ய வேண்டும் என்றால், அவை ஆங்கிலம், சமஸ்கிருதம் மற்றும் இந்தி பதிப்புகளில் வெளியிடப்பட்டிருந்தால் மட்டுமே பதிவிட முடியும் என்பது மிகவும் வஞ்சகமான ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது. சமஸ்கிருதத்திற்கு துதிபாடக்கூடிய மத்திய அரசு, இந்தியாவின் மூத்த மொழியாம் தமிழ் மொழியை திட்டமிட்டு இந்த இணையவழி நூலகத்திலே புறக்கணித்திருக்கிறது. தமிழின மக்களை இரண்டாம் தர குடிமக்களாக்க எண்ணி அவமதிப்பதற்குரிய செயலாக இது அமைந்திருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாகக் கருதுகிறது. ஆகவே, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, இணையவழி நூலகத்தில் செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்புகள் அடங்கிய நூல்களும், தமிழ் மொழியின் ஆளுமையிலான எழுத்தாளர்களின் நூல்களும் இடம்பெறச் செய்ய

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இணையவழி நூலகத்தில் தமிழ் மொழி நூல்களைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, வற்புறுத்தி தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் ஆளுகின்ற அரசினுடைய மனித வள மேம்பாட்டுத் துறைமூலம் இணையவழி நூலகம் தொடங்கப்பட்டு, அதில் தென் மாநிலங்களுடைய எந்த மொழியையும் சேர்க்கவில்லை. அதேபோல, நம்முடைய தமிழ் மொழியும் அதில் இடம்பெறவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆங்கிலம், இந்தி தவிர, சமஸ்கிருதம் புதிதாக இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அப்படியென்றால், சமஸ்கிருதத்தை இந்தியாவிலே இன்றைக்கு யார் முன்னிறுத்துகிறார்கள்? அதிலே மாறுபட்ட கருத்து நமக்குக் கிடையாது. ஆனால், தமிழை இதில் சேர்க்காமல் ஏன் விட்டார்கள்? தமிழ் ஏன் விடப்பட்டிருக்கிறது? இதற்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மத்திய அரசு சரியான பதிலைத் தர வேண்டும். நாங்கள் சொல்வதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், தமிழ் மொழி குறித்து நாம் எல்லோரும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற தவறுகளைச் செய்தால், எவ்வளவு நெருங்கிய நண்பராக இருந்தாலும் அவரைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதை நீங்கள் சரியாகச் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். அதற்கு காங்கிரஸ் கட்சி உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். இதற்குரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்கும்படி உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அபூபக்கர், நீங்கள் இருங்கள்.* Zero hour-ல் *இதை நான் கேட்க வேண்டும் என்று நீங்கள் என்னிடம் அறையில் வந்து*

கேட்கவில்லை. இப்படியெல்லாம் திடீரென்று பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால் எப்படி நான் allow செய்யமுடியும்? இதெல்லாம் முறையில்லை. உட்காருங்கள். இன்றைக்கு வேண்டாம், உட்காருங்கள். மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய தமிழ் புறக்கணிக்கப்படக்கூடிய இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்கு வந்து இன்றுடன் 5 நாட்கள் ஆகின்றன. ஏனென்றால், National Digital Library of India என அவர் சொல்கிற இந்திய தேசிய இணைய நூலகத்தில் ஏற்கெனவே அவர்கள் இது எதற்காக உருவாக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்கள். Ministry of Human Resource Development-ன் ஒரு திட்டம் இது. இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மின் நூலகங்களையும் (Digital Libraries) ஒருங்கிணைப்பதற்காக ஒரு portal-ல், ஒரு நுழைவு வாயிலில் அனைத்துப் புத்தகங்களையும் கொண்டுவரக்கூடியது இதன் குறிக்கோள். அதில் இந்திய மொழிகள் முதலில் போடப்பட்டிருந்தன. தமிழ் அதில் முதன்மையாக இருந்தது. தமிழ், குஜராத்தி, இந்தி, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், தெலுங்கு, உருது, வங்காளம் ஆகிய இந்திய மொழிகளும், உலக மொழிகளான German, English, French, Italian, Portuguese, Spanish, Chinese, Japanese ஆகிய 8 மொழிகளும் அதில் இடம் பெற்றிருந்தன. இதன் இரண்டு குறிக்கோள்கள்: ஒன்று மொழிகளை கற்பித்துத் தருவது, மொழி அறியாதவர்களுக்கு உலகம் முழுக்க மொழி கற்பித்துத் தருவது. இரண்டாவது, இந்திய மொழிகளில் இருக்கிற நல்ல நூல்களை விலையில்லாமல் இலவசமாக உலகத்தில் இருக்கின்ற எல்லோருக்கும் கொண்டுபோய் சேர்ப்பது. இவைதான் அதனுடைய குறிக்கோள். இதுகுறித்து நான் திரு. பிரகாஷ் ஜவடேகர் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக point out செய்தேன். ஐந்து நாட்களுக்கு முன்பாக pilot testing ஆக ndli.com என்ற site வடிவமைக்கப்பட்டு அது மேலேறியிருக்கிறது. மேலேறிய அந்த நாள் user Interface திரு. பிரகாஷ் ஜவடேகர் அவர்களிடமிருந்து வந்திருக்கிற பதில் என்னவென்றால், எல்லா மொழிகளிலுமே மொழி கற்பித்துத் தருவதற்கும், மொழிகளில் இருக்கிற நூல்களை உள்ளே கொண்டுபோவதற்கும் வசதிகள் செய்து தரப்போகிறோம்.

ஆனால், முதல் நாள் pilot testing-ல் வந்திருப்பது மூன்று மொழிகள். நீங்கள் சொன்ன இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம்.

2018 ஜூலை 3] [திரு. க. பாண்டியராஜன்]

இந்த மூன்று மொழிகளுக்கும் User Interface design செய்து, அது அந்த மொழி வடிவத்திலேயே தெரிகிறது. அதுதான் நிஜம். ஒரு இலட்சம் புத்தகங்களுக்குமேல் அதில் upload செய்திருக்கிறார்கள். இதில் upload, download செய்கிற உரிமைகள் சில நிறுவனங்களுக்கு தரப்பட்டிருக்கின்றன. பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலிருந்து சில புத்தகங்களை அதில் upload செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற தமிழ்ப் பல்கலைக்கழகம் உட்பட அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் பேரறிஞர் அண்ணா உருவாக்கிய International Institute of Tamil Studies உட்பட இதற்கு authority கொடுத்திருக்கிறார்கள். நாமும் அதில் upload செய்யலாம். ஆனால் இப்பொழுது upload செய்வதற்கு அறிவுசார் சொத்துரிமை நாம் கொடுக்க வேண்டியதிருக்கிறது. 149 தமிழறிஞர்களின் புத்தகங்களை நாம் அரசுடைமையாக்கியிருக்கிறோம். அந்த அறிவுசார் சொத்துரிமையை அவர்களுக்கு கொடுக்கச் சொல்கிறார்கள். அதாவது 149 அறிஞர்களுடைய 2,000 புத்தகங்களுக்குமேல் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவு பெற்று அந்த அறிவுசார் சொத்துரிமையை நாம் அவர்களுக்குத் தரப் போகிறோம். இவற்றையெல்லாம் மின்மயமாக்குவதற்காக தமிழக அரசு ஏற்கெனவே work செய்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும் Tamil Virtual Academy மூலமாக 10,000 புத்தகங்களுக்குமேல் மின்மயமாக்கி (digitalize) ஏற்கெனவே www.tamildigitallibrary.in-ல் நாம் upload செய்திருக்கிறோம். இந்த உரிமையை அவர்களுக்கு நாம் இப்பொழுது கொடுக்க வேண்டியதிருக்கிறது. இதை வெகுவிரைவில் நாம் தரப்போகிறோம். அப்பொழுது தமிழில் வந்திருக்கிற அனைத்து நல்ல புத்தகங்கள், அறிவுசார் சொத்துரிமை இருக்கிற புத்தகங்கள் அனைத்துமே இதில் வெகுவிரைவில் பதிவேற்றம் செய்யப்படும். User Interface இரு வாரங்களுக்குள் design செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். User Interface design செய்தால்தான் தமிழில் அந்தப் புத்தகங்களைப் பார்க்க முடியும். இப்பொழுது Unicode மூலமாக அதை நாம் enter செய்து பதிவேற்றம் செய்ய வேண்டியதிருக்கிறது. இந்த உரிமையை தமிழகத்தில் இருக்கின்ற 20 நிறுவனங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். வெகுவிரைவில் அதில் தமிழ் புத்தகங்கள், இந்த 2,000 புத்தகங்கள், தமிழ் துறையில் இருக்கக்கூடிய அந்த 2,000 புத்தகங்கள், ஏற்கெனவே IT துறையில் அவர்கள் ஏற்றியிருக்கிற 10,000 புத்தகங்களுக்குமேல் எல்லாமே அந்த இணையதளம் மூலமாக உலகத்தில் இருக்கின்ற அனைத்து தமிழர்களுக்கும், அனைத்து அறிஞர்களுக்கும் கொண்டுபோய்ச்

சேர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் உறுதி கொடுத்திருக்கிறது. இது HRD Ministry-ல் செய்கிற வேலை. தேவையில்லாமல் அந்த மூன்று மொழிகளில் தெரிவதுபோல் முதலில் போட்டதனால்தான் இந்தத் தவறான புரிதல் வந்தது. வெகுவிரைவில் இந்த 8 இந்திய மொழிகளிலும், 8 அயல்நாட்டு மொழிகளிலும் User Interface set செய்வார்களாம். இதை ஒரு pilot project ஆக எடுத்திருப்பதாக அவர்கள் சொன்னார்கள். வெகுவிரைவில் அனைத்து நூல்களும் சிறப்பாகத் தெரிவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும். Tamil Virtual Academy மூலமாகவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூலமாகவும் நம்முடைய titles எல்லாவற்றையும் Net-ல் கொண்டுவந்துவிட்டோம். இது உலகத் தமிழர்கள் அனைவராலும் போற்றப்படுகின்ற விஷயம். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் விளைந்த இந்தத் திட்டத்தின்மூலமாக ஏற்கெனவே 10,000 புத்தகங்கள் இணையவழி தளத்தில் இருக்கின்றன. இந்த NDLI இணையதளம் உலக அளவில் தமிழ்ப் புத்தகங்களை கொண்டுபோய் சந்தைப்படுத்துவதற்கு நமக்கு இன்னும் ஒரு support-ஆக இருக்கும் என்று சொல்லி, இதில் எந்தவிதமான புறக்கணிப்பையும், தமிழ் புறக்கணிப்பையும் அம்மாவின் அரசு ஏற்றுக்கொள்ளாது. அதை எதிர்த்து முதல் குரல் கொடுக்கின்ற அரசாங்கமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாங்கம் இருக்கும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது தொடர்பாக இரண்டொரு கருத்துகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்திய தேசிய மின் நூலகமானது மத்திய அரசினுடைய மனித வள மேம்பாட்டுத் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலும், கன்னிமாரா நூலகத்திலேயிருக்கிற 10,000 நூல்களை மின்மயமாக்குவதற்கான

2018 ஜூலை 3] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கன்னிமாரா நூலகத்தின் மூலமாக டிசம்பர் 2017-ல் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அனைத்தும் அதிலே இணைக்கப்படுவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய அரசு அனைத்து நடவடிக்கைககளையும் முழுமையாக மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்தையும் மின்மயமாக்குவதற்குண்டான ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கூடங்குளம் அணு மின் நிலையம், நிலம் கொடுத்தவர்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில்தான் கூடங்குளம் அணு மின் நிலையம் என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. அது 1,000 மெகாவாட் மின்சாரத்தை தமிழகத்திற்கு தந்துகொண்டிருக்கிறது. அதிலே உள்ளூரிலே இருக்கின்றவர்களுக்கு, அந்தத் திட்டத்திற்காக நிலத்தை இழந்தவர்களுக்கு, வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற ஓர் ஒப்பந்தம் 1999-ல் மாவட்ட நிருவாகத்தோடு அணு மின் கழகம் செய்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அந்த நிலை இப்போது அங்கு இல்லை. எனவே, அங்கு ஒரு சந்தோஷமில்லாத நிலைமை* —restless feeling *நிலவுகிறது. எனவே, அம்மா அவர்களுடைய நினைவுகளை ஒவ்வோர் அணுவிலும் சுமந்து செயல்படுகின்ற எடப்பாடியாரின் தலைமையிலான தமிழக அரசு, இதில் தலையிட்டு, மத்திய அரசிடம் பேசி, அணு மின் கழகத்திடம் பேசி, உள்ளூர்வாசிகளுக்கும், நிலத்தை இழந்தவர்களுக்கும் வேலை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*